Arrears of Sales Tax

*139 *Q.*—Thiru N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) the number of persons whose arrears of Sales Tax have been remitted by Government during the current financial year;

(*b*) the total amount so remitted; and

(*c*) the number of persons for whom stay-orders have been issued in regard to the collection of such arrears?

விற்பனை வரி பாக்கிகள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசு நடப்பு நிதியாண்டில் விற்பனை வரி பாக்கிகள் எத்தனை பேருக்கு வஜா செய்தது?

(இ) மொத்தத் தொகை எவ்வளவு?

(உ) எத்தனை பேர் பாக்கிகளுக்குத் தடுப்பு ஆணை (**Stay Order**) கொடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: 24-2-1968 வரை (அ) 10.

(இ) ரூபாய் 3,31,385·30.

(உ) 30.

போர்ட் ஆஃப் ரெவின்யூ மூலமாக 17-ம், அரசாங்கத்தின் மூலம் 13-ம், தடுப்பு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது என்றிருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன்: வஜா செய்யப்பட்டது யார் யாருக்கு எந்த ஊரில்? ஸ்டே ஆர்டர் கொடுத்தது எத்தனை? அதனால் எவ்வளவு ரூபாய் அரசாங்கத்திற்குப் பாதிக்கும் அளவில் கொடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: ஸ்டே ஆர்டர் என்பதை முதலில் விளக்க விரும்புகிறேன். சில குறிப்பிட்ட சிரமங்கள் ஏற்படுகிறவர்களுக்குக் கொஞ்சம் காலதாமதம் அளிப்பதுதான் ஸ்டே ஆர்டர் என்பது. சர்க்காரில் சில வரிகள் போடுகிறோம். அந்த வரிகள் சில பேர்களிடமிருந்து வசூலிக்கப்படும்போது அவர்கள் தங்களுக்கு அந்த அளவு வரி விதிப்பு நியாயமாகத் தவறு என்பதைத் தக்க காரணத்தோடு குறிப்பிட்டு அதன்மீது முடிவு செய்ய வேண்டுமென்று கோரும்போது ஏற்கெனவே உள்ளதைக் கொடுக்கவேண்டுமென்று விதிப்பது ஒன்று. உறுப்பினர் சொன்னதைப்போல அரசாங்கத்தின் விருப்பு வெறுப்புக்காக செய்வதல்ல அது. இங்கு வஜா செய்யப்பட்டது என்பது சில காரணங்களுக்காக, சில விதி முறைகளின்கீழ் செய்யப்பட்டதுதான். ஸ்டே ஆர்டர் போட்டதும் நான்கு மாதங்களுக்குப் பிறகு நியாயமானது என்று தெரிந்ததும் கட்டுகிறார்கள். நியாயமில்லை என்றால் கட்டுவதில்லை. இந்த ஆண்டு 30 ஸ்டே ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன். அது யார் யாருக்கு என்று கேட்க ஆசைப்படுகிறார். அதிலும் அரசாங்கம் அதிகமாகத் தலையிடவில்லை. நான் பொறுப்பேற்றதற்குப் பிறகு நடந்த காரியங்களில் 30 ஸ்டே ஆர்டர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவர் அவர்களே, இந்த ஸ்டே ஆர்டரை அரசாங்கமே நேரடியாகக் கொடுத்திருக்கிறதா? அப்பெலட் டிரிபியூனலில் கொடுத்ததா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அப்பெலட் டிரிபியூனலும் கொடுக்கலாம். இங்குள்ளவை அரசாங்கத்தைப் பொறுத்தது. போர்ட்

1st March 1968]

ஆஃப் ரெவின்யூ கொடுத்தது 13. அப்பெலட் டிரிபியூனலுக்கும் அதிகாரம் இருக்கிறது. இந்த அதிகாரத்தை ஸ்டே செய்வதற்கு யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. யார் யாருக்கு கொடுக்கப்பட்டது என்பதையும் படிக்கிறேன். போர்ட் ஆஃப் ரெவின்யூ மூலமாக 17 பேருக்கு இந்த வருஷம் கொடுக்கப்படுடிருக்கிறது.

Thiru Textool Company Ltd., Coimbatore : Rs. 32,730.

Thiru East India Corporation Ltd., Madras-3 : Rs. 54,328.

Thiru B. Venkateswara Rao & Co. Madras-7 : not furnished.

Thiru South India Mosaic Tiles and Engineering Co., Madurai : Rs. 8,846.

Thiru K. M. Parthasarathy Chettiar, Madras-7 : Rs. 4,003.

Thiru Sakthi Sugars India Ltd., Erode : Rs. 57,482.

Thiru Githanjali Mills Ltd., Sankarankoil : Rs. 5,600.

Thiru Aruna Sugar, Madras : Rs. 1,10,064.

Thiru Seshasayee Industries Ltd., Madras : not furnished.

Thiru Kaleswaran Mills Ltd., Coimbatore : Rs. 85,132.

Thiru K. G. Ponnuswamy Chettiar & Sons, Bhavani : Rs. 11,254.

Thiru Krishna Iyer, Vellore : Rs. 1,325.

Thiru W. S. Insulators of India Ltd., Madras-2 : not furnished.

Thiru Seshasayee & Industries, Vadalur : Rs. 48,000.

Thiru Amruthur Eng. Company, Madras-18 : Rs. 3,346.

Thiru Southern Bricks Works, Aminjikarai : Rs. 9,075.

Thiru Neyveli Ceramic Research Institute, Neiveli : Rs. 30,000.

இவையெல்லாம் போர்டு அப் ரெவின்யூ கொடுத்தது. அரசாங்கத்தின் மூலம் நேரடியாக கொடுக்கப்பட்டது 13 ஆகும். அவைகளையும் படிக்கிறேன்.

Thiru C. Narayanan Chettiar, Virudhachalam : Rs. 4,037.

Thiruvalargal C. Narayanaswamy Chettiar & D. Kadirvelu Chettiar, Virudhachalam : Rs. 8,160.

Thiru Pankaja Mills Ltd., Coimbatore : Rs. 35,198.

Thiru Tamilnad Spinning Mills Ltd., Tiruppur : Rs. 13,237.

Thiru A. D. Jayaveerapandia Nadar & Brothers, Nagapattinam : Rs. 44,250.

Thirumathi Pulliammal, Aryanoor, Salem district : Rs. 59,646.

Thiru Krishna Biscuit Factory, Mannargudi: figure not furnished.

Thiru Somasundaram Mills, Coimbatore : figure not furnished.

Thiru K. S. T. Raja Chettiar, Pollachi : Rs. 88,871.

Thiru C. Doraiswamy.

Sri Venkateswara Rice Mills, Attur, Salem district.

Dealers in denatured spirit.

Certain Agency transactions in chillies in Ramanathapuram.

இந்த 13-லும் குறைவான தொகைகள் தான் இருக்கின்றன. ஆனால் இவைகள் எல்லாம் வியாஜ்ஜியம் இருக்கிறது என்பதற்காகத்தான்

கொடுக்கப்பட்டதே தவிர பொதுமக்களின் நண்பர்களுக்கும், யார் யார் வேண்டியவர்களுக்கும் கொடுத்ததாகக் கருதமுடியாது. இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சர்க்காருக்கு வரி வஜா கொடுக்கிற உரிமை இருக்கிறது. ஆனால் அதற்கு restrospective effect கொடுக்கும் வாய்ப்பு சட்ட ரீதியில் இல்லாத காரணத்தால் எப்போது notifications போடுகிறோமோ அதற்குப் பின்னால்தான் extend செய்ய முடியும். இதனால்தான் வஜா செய்யவேண்டி வந்தது. அதனால்தான் 3 லட்சம் வந்தது. இப்போது வரியைப் பற்றி assess செய்கிற முறை முடிந்துவிட்டாலும் கூட 3 வருடங்களுக்குக் குறைத்து மதிப்பிட்ட போதிலும் மீண்டும் அதை reassess பண்ணும் உரிமை சட்டத்தில் இருக்கிற காரணத்தால் மறுபடியும் திருப்பி reassess பண்ண வாய்ப்பு இருக்கிறது. அந்த நேரத்தில் சில கட்சிக்காரர்கள், வியாபாரிகள் வருகிறார்கள். அவர்கள் சொல்வதிலும் நியாயமிருக்கிறது. அரசாங்க உத்தரவு இருக்கிறது. அதிகாரிகள் தவறாக வரி போட்டுவிட்டார்கள் என்று சொன்னால் அதை கவனித்துப் பார்க்கும்போது சில இடங்களில் நியாயம் இருக்கிறது. பொது மக்களுக்குக் கெடுதல் ஏற்பட்டுவிடக்கூடாது. நீதி சரியாக இருக்கவேண்டும் என்பதற்காக அரசைப் பொறுத்தவரை இவ்வாறு செய்யப்படுகிறது.

திரு. வி. கே. ராமசாமி முதலியார் : போட்ட வரிகளைக் கட்டி விட்டு பிறகுதான் அப்பீல் செய்யவேண்டுமென்று இருக்கிறது. அம்மாதிரி இருந்தால் அவ்வாறு செய்யப்பட்டதா ? இல்லையென்றால் ஏன் வசூலிக்க வில்லை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வரி கட்ட வேண்டுமென்பது சட்டம். சில இடங்களில் தவறுகள் ஏற்பட்டுவிட்டது என்று சொல்லும் நேரத்தில், நியாயம் இருக்குமானால் இந்த அரசாங்கத்திற்கு சேல்ஸ் டாக்ஸ் விதிமுறைப்படி ரத்து செய்யவும், வஜா செய்யவும், அதிகார வரம்பின் கீழ் அப்படிப்பட்ட வரிகள் போட்டுவிடுவதால் கெடுதல் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகக் கால தாமதம் செய்யும் ஏற்பாடுதான் இந்த " ஸ்டே " என்பது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இவ்வாறு வரி வஜா செய்யப்பட்ட பாக்கியவான்கள் யார்யார் ? இந்த லாபத்தை அடைந்த பாக்கியவான்கள் யார் யார் ? அவர்களுடைய பெயர் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதிலே மாண்புமிகு உறுப்பினர் தியாகராஜன் அவர்கள் ஒரு தவறான கருத்தை வைத்துக் கொண்டிருக்கிறார். இது மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டு மென்பதற்காக அல்ல. ஏற்பட்டுள்ள தவறுகளுக்கு ஏற்ப வஜா செய்வதே தவிர அரசாங்கம் யாருக்கும் அம்மாதிரியாகச் செய்யவில்லை. சட்டப்படி வஜா செய்ய முடியுமே தவிர (Retrospective effect) கொடுக்க முடியாது. நம்முடைய அதிகாரிகள் செய்யும் தவறுகளால் சிக்கல் ஏற்பட்டு விடுகிறது. அவர்கள் தவறாக அசெஸ் செய்து விடுகிறார்கள். அதற்குப் பின்னால் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட முறையில்

Central Electro-Chemical Research Institute, Karaikudi ;

Country Chekku Oil Producers Co-operative Societies ;

Sri Sivananda Saraswathi Sevashram, Tambaram ;

Schieffelin Leprosy Research Sanatorium, Karigiri, N.A. District;

Housing Board ; Bharat Sevak Samaj ; Sales of compost manure to agriculturists and agricultural co-operative societies by the Corporation of Madras, any Municipal Council, Panchayat Union Council or Panchayat in the State,

என்ற இந்த ஏழு நிறுவனங்களுக்கு இந்த மாதிரியான முறையில் வரிவஜா செய்யப்பட்டிருக்கிறது. அது போக மற்றும் மூன்று

1st March 1968]

இடங்களில் ஒரு சில தவறுகள் ஏற்பட்டது. உதாரணமாக "Processed cloth" சம்பந்தமாக இருக்கிற வியாபாரிகளுக்கு வரி வஜா செய்யப்பட்டது. "Procesed on Textile" ஒன்று என்றும் அதற்குத் தனியாக வரி கிடையாது என்றும் உத்தரவு இருக்கிறது. நம்முடைய விற்பனைவரி அதிகாரிகள் அதற்கும் வரி போட்டு இருந்தார்கள். அதனால் அந்த வியாபாரிகளுக்கு வரி கொடுக்க வேண்டாமென்று விதிவிலக்கு கொடுக்க வேண்டியிருந்தது. அதுவும் அவர்கள் மனு செய்து கொண்டார்கள். அதனால் ஐந்து வருடங்களுக்கு அவர்களிடம் வரி வாங்கவில்லை.

Travellers' Bungalows and Restaaurants run by the Department of Tourism of the Government of India என்று இந்திய சர்க்காரின் சார்பில் நடத்தப்படுகிற "Restaurants"-களுக்கு கொடுக்கப்படும் உணவு பண்டங்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் வாங்குவதில்லை. அதனால் இவர்கள் மீது வரி போட்டு வஜா செய்யும்படியும் ஏற்பட்டது.

THIRU R.M. SESHADRI : I would like to know, Sir, if there is any uniform principle which is applied in the grant of these remissions of sales tax and, if so, if the principle has been announced or published anywhere and, also I would like to be informed whether there is any statutory provision in the Sales Tax Act which gives power to the Govern ment to make remissions of this character ? Only one more observation, Mr. Chairman, Sir.

MR. CHAIRMAN : The hon. Member must put a question.

THIRU R. M. SHESHADRI : Yes, Sir. From the manner in which the answer has been given by the Hon. Minister I get the impression that where a tax has been levied without lawful authority and which is the subject of appeal, the Government interfere and do the work of the appellate authority. In that case, will they do it in all cases where the taxes have been wrongfully imposed ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Under section 16 of the Madras General Tax Act, the assessing authority may revise the assessment order so as to assess any turnover which has for any rea sonescaped the assessment or re-assess turnover which has for any reason been assessed at a rate lower then tha rate at which it is assessable. This power is exercisable at any time within a period of five years from the expiry of the year to which the tax relates. The Government examined whether closed assessments need be re-opened every time when there is a new interpretation given by the Board of Revenue, Government or Courts. In May 1967, the Government have taken a policy decision that advantage may no doubt be taken of interpretation of law by courts so as to retrospectively collect tax upto five years, but that if the assessee shows that owing to an earlier departm ental or earlier court interpretation he did not collect tax, an administrative waiver should be considered. This is the policy decision. Stay of collection of tax is generally ordered when representations are made to Government or the Board, pending examination of the contentions of the petitioner, so that no real hardship may be caused to the individual in deserving cases. Such interim stay does not involve any loss of revenue.

[1st March 1968

I want to place another point also before the House. Even here the Government have taken a policy decision in April 1967 to the effect that no stay order should be issued where the Sales Tax Appellate Pribunal or other appellate authority is seized of the matter as under the provisions of the Madras General Sales Tax Act, 1959, the Tribunal or the Appellate authority itself can stay recovery or grant instalment payment facilities. This policy is departed from only in exceptional cases.

திரு. கே. ராஜாராம் : அமைச்சர் அவர்கள் படித்ததிலிருந்து assessing authority தான் அம்மாதிரி செய்யலாம் என்று அதிகாரம் கொடுத்திருப்பதாகப் படித்தார்கள். அப்படியிருக்க போர்டு ஆப் ரெவின்யூவும், அரசாங்கமும் நேரில் தலையிட்டு "ஸ்டே" போடவோ, வஜா செய்யவோ எந்த விதியின்கீழ் அதிகாரமிருக்கிறது என்பதை அறிந்து கொள்வது நல்லது. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவில்லை. அதைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அறிந்து சொல்லப்படும்.

THIRU K. RAJARAM : We may take it up tomorrow.

THIRU R. M. SESHADRI : What right have the Government to interfere with the functioning of the quasi-judicial authority like the Sales-tax Tribunal and say 'this is my policy decision ; you carry it out '. That is why writ petitions get allowed in the High Court. No executive authority, let it be the highest authority of the Government, can interfere with the exercise of the quasi-judicial function in its own discretion. It is an elementary peinciple of law and I am sure the Non. Minister will kindly take note of what I am saying and obtain legal opinion upon this aspect of the matter.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Government have taken a policy decision and that applies as I have reiterated only in exceptional cases.

THIRU K. RAJARAM : It may be the policy of the Government. But we want to know under what powers the Government is authorised to waive or give stay orders in these cases. That is what we want to know.

MR. CHAIRMAN : The Hon Minister, I suppose, wants notice.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Yes, Sir.

திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, 1966 ஏப்ரல் முதல் 1967 வரையில் இது போன்று விற்பனை வரி வஜா செய்யப்பட்டு அதனால் லாபம் பெற்ற கனவான்கள் யார் யார்? எவ்வளவு தொகை என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதை விட அது ஒன்றும் குறைந்தது அல்ல. ஆனால் ஸ்டே போடுவதோ அல்லது வஜா கொடுப்பதோ வேண்டுமென்று கொடுப்பதல்ல என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதனால் அவர்கள் லாபம் அடைந்தார்கள் என்பது சரியான கருத்தல்ல.

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : தலைவரவர்களே, இவ்வாறு தவறாக செயல்பட்ட விற்பனை அதிகாரிகளின் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா ?